## நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II, கும்பகோணம்

**முன்னிலை : திரு. எஸ். பாலதண்டாயுதம், B.Sc., B.L.,**

**நீதித்துறை நடுவர் எண்.II, கும்பகோணம்.**

**2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 15–ம் நாள் திங்கட்கிழமை**

**முன்னுரை பதிவேட்டு வழக்கு எண்.86/2025**

அரசுக்காக: காவல் ஆய்வாளர்,

தாலுக்கா காவல் நிலையம், கும்பகோணம்,

குற்ற எண்.41/2025 --- குற்றமுறையிடுபவர்.

//எதிர்//

1) ஜீவா, 38/25, த/பெ. தங்கையன்,
8, திருவள்ளுவர் நகர்,
எலுமிச்சங்காபாளையம், கும்பகோணம் தாலுக்கா.

2) மணிமாறன், 36/25, த/பெ. மகாலிங்கம்,
நடுத்தெரு, கோவில்பத்து, வலங்கைமான் தாலுக்கா,
தற்சமயம் சந்தியா நகர், அண்ணலக்ரஹாரம்,
கும்பகோணம் தாலுக்கா. --- எதிரிகள்.

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டும், குற்ற முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. அய்யப்பன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலினையில் இருந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

### உத்தரவு

இவ்வழக்கின் புகார்தாரர் கவியரசன் என்பவரின் தந்தை பாலகிருஷ்ணன் என்பவருக்கும், இவ்வழக்கின் 1, 2 எதிரிகளுக்கும் இடையே கடந்த 2020–ம் ஆண்டு பிரச்சனை ஏற்பட்டு, 1, 2 எதிரிகள் இருவரும் சேர்ந்து புகார்தாரரின் தந்தையை கட்டை மற்றும் இரும்பு கம்பியால் தாக்கியும் இது தொடர்பாக பட்டீஸ்வரம் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முன் விரோதம் காரணமாக கடந்த 01.02.2025–ம் தேதி 18.30 மணிக்கு கும்பகோணம், தாலுக்கா காவல் சரகம் எலுமிச்சங்காபாளையம் திருவள்ளுவர் நகர் இவ்வழக்கின் 1–ம் எதிரியின் வீட்டு முன்பு புகார்தாரர் கவியரசன் தனது அக்காவின் திருமணம் விசயமாக தனது சித்தி வீட்டிற்கு சென்ற போது, புகார்தாரரை 1–ம் எதிரி வழி மறித்தும், குச்சிகாரி தேவிடியா மகனே உனக்கும் ஒரு நாளைக்கு வெட்டு உண்டுடா என காமகுரோதமான வார்த்தைகளால் திட்டியதற்கு புகார்தாரர் தேவையில்லாமல் ஏன் என்னிடம் தகராறு செய்கிறாய் என்று கேட்ட போது, 1, 2 எதிரிகளை வரச்சொல்லி 1, 2 எதிரிகள் இருவரும் சேர்ந்து புகார்தாரரை பார்த்து குச்சிகாரி தேவிடியா மகனே என காம குரோதமான வார்த்தைகளால் திட்டியும், 1–ம் எதிரி அவர் இடுப்பில் மறைத்து வைத்து இருந்த பெரிய கத்தியை கையில் எடுத்துக்கொண்டு, புகார்தாரரை பார்த்து நாளை

நடைபெறும் திருமணம் எங்களை மீறி எப்படி நடக்கும் என்று பார்த்து விடுகிறோம். உன்னை இங்கேயே குத்தி கொலை செய்து விடுகிறேன் என உயிருக்கு அச்சத்தை ஏற்படுத்தும வகையில் கத்தியை கழற்றிக்கொண்டு மிரட்டியும், புகார்தாரர் பயந்து ஓடிய போது 1, 2 எதிரிகள் இருவரும் சேர்ந்து கத்தியை மாறி மாறி கையில் வைத்துக் கொண்டு புகார்தாரரை விரட்டிக்கொண்டு சென்றும், எதிரிகள் இருவரும் சேர்ந்து புகார் தாரரை பார்த்து என்னைக்கு இருந்தாலும் உன்னை தீர்த்து கட்டி விடுகிறோம் என கொலை மிரட்டல் செய்த 1, 2 எதிரிகளின் செய்கையானது 1–ம் எதிரி மீது சட்டப் பிரிவுகள் 126(2), 296(பி), 351(3) பி.என்.எஸ். உ/இ 25(1–A) Arms Act–ன் படியும், 2–ம் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(பி), 351(3) பி.என்.எஸ். உ/இ 25(1–A) Arms Act–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கும்பகோணம், தாலுக்கா காவல் நிலைய உதவி ஆய்வாளரால் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) 1, 2 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானபோது வழக்கு ஆவணங்களின் நகல்கள் குவிமுச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3) இவ்வழக்கில் மேற்படி நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து வாதாட வசதி உள்ளதா என்று 1, 2 எதிரிகளிடம் கேட்டபோது, 1, 2 எதிரிகள் தங்களுக்கு அத்தகைய வசதி உள்ளது என்று கூறினர்.

4) 1, 2 எதிரிகள் மீது சட்டப்பிரிவு 25(1–A) Arms Act–ன் கீழ் சுமத்தப் பட்டுள்ள குற்றமானது மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால், 1, 2 எதிரிகள் மீதான இவ்வழக்கை தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதி மன்றத்திற்கு கு.வி.மு.ச. பிரிவு 209(அ)–ன் கீழ் பணிந்து ஒப்புவிக்கப்படுகிறது.

5) இவ்வழக்கின் 1–ம் எதிரி 03.02.2025 அன்று கைது செய்யப்பட்டு, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் Crl.OP(MD)No.4490 of 2025. 11.03.2025 தேதியிட்ட உத்தரவின் பேரில் 1–ம் எதிரி 13.03.2025 அன்றும், 2–ம் எதிரி 30.05.2025 அன்று கைது செய்யப்பட்டு, மாண்பமை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற குற்றப் பல்வகை மனு எண்.3029/2025 06.06.2025 தேதியிட்ட உத்தரவின் பேரில் 2–ம் எதிரி 09.06.2025 அன்று பிணையில் சென்றுள்ளார். மேற்படி எதிரிகள் தொடர்ந்து அதே நீதிமன்ற பிணை உத்தரவில் இருந்து வர வேண்டுமென்று பிரிவு 209(ஆ) குவிமுச–ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

6) இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஆவணங்களையும், தடயப் பொருள்களையும் மேல் விசாரணைக்காக மாண்புமிகு தஞ்சாவூர் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு குவிமுச பிரிவு 209(இ)–ன் கீழ் அனுப்பி வைக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

7) இவ்வழக்கில் மேல் விசாரணை தொடரும் படி மாண்புமிகு தஞ்சாவூர் மாவட்ட அரசு வழக்குரைஞருக்கு கு.வி.மு.ச.பிரிவு 209(ஈ)–ன் கீழ் அறிவிப்பு ஒன்றை அனுப்பி வைக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 22–ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்./– எஸ். பாலதண்டாயுதம்,
நீதித்துறை நடுவர் எண்.II,
கும்பகோணம்.

**நகல்.–**

1. தலைமை நீதித்துறை நடுவர், தஞ்சாவூர் (இ) கும்பகோணம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. அரசு வழக்கறிஞர், முதன்மை மாவட்ட (ம) அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

## <u>முன்னுரைப் பதிவேடு எண்.26</u>

| | | |
|---|---|---|
| 01 | முன்னுரை பதிவேட்டு வழக்கு எண் | 86/2025 |
| 02 | குற்ற முறையிடுபவரின் பெயர் | உதவி ஆய்வாளர், கும்பகோணம், தாலுக்கா காவல் நிலையம். |
| 03 | எதிரிகளின் பெயர்கள். | 1) ஜீவா, 38/25, த/பெ. தங்கையன்,<br>8, திருவள்ளுவர் நகர்,<br>எலுமிச்சங்காபாளையம், கும்பகோணம் தாலுக்கா.<br>2) மணிமாறன், 36/25, த/பெ. மகாலிங்கம்,<br>நடுத்தெரு, கோவில்பத்து, வலங்கைமான் தாலுக்கா,<br>தற்சமயம் சந்தியா நகர், அண்ணலக்ரஹாரம்,<br>கும்பகோணம் தாலுக்கா. |
| 04 | புகாரின் சுருக்கம் | கு.எண்.41/2025, சட்டப்பிரிவுகள் 126(2), 296(பி), 351(3) பி.என்.எஸ். உ/இ 25(1-A) Arms Act-ன் கீழ். |
| 05 | அரசுத்தரப்பு சாட்சிகள் | சாட்சிகளின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. |
| 06 | எதிரி தரப்பு சாட்சிகள் விபரம் | இல்லை |
| 07 | வழக்கின் சுருக்கம் | முன்னுரை பதிவேட்டின் உத்தரவு இணைக்கப் பட்டுள்ளது. |
| 08 | வழக்கின் முடிவு | கு.வி.மு.ச. பிரிவு 209 (ஆ)-ன் கீழ் மாண்புமிகு தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு பணிந்து ஒப்புவிக்கப்பட்டது. |
| 09 | வழக்கு கோப்பிற்கு எடுத்த நாள் | 12.09.2025 |
| 10 | சம்பவ நாள் | 01.02.2025 |
| 11 | எதிரிகள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாள் | 1-ம் எதிரி 03.02.2025, 2-ம் எதிரி 30.05.2025 |
| 12 | எதிரிகள் பிணையில் வெளிவந்த நாள் | 1-ம் எதிரி 13.03.2025, 2-ம் எதிரி 09.06.2025 |
| 13 | உத்தரவு நாள் | 15.06.2026 |
| 14 | காலதாமதத்திற்கான காரணம் | நாட்காட்டி படிவம் இணைக்கப்பட்டுள்ளது. |

ஒம்./- எஸ். பாலதண்டாயுதம்,
நீதித்துறை நடுவர் எண்.II,
கும்பகோணம்.

//உண்மை நகல்//

நீதித்துறை நடுவர் எண்.II,
கும்பகோணம்.

**குவி.மு.ச. பிரிவு 209 (ஈ) பிரிவின் கீழ் பிறப்பிக்கப்படும் அறிவிப்பு**

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II, கும்பகோணம்**

**முன்னுரை பதிவேட்டு வழக்கு எண்.86/2025**

இந்நீதிமன்ற முன்னுரை பதிவேட்டு வழக்கு எண்.86/2025, கும்பகோணம், தாலுக்கா காவல் நிலைய குற்ற எண்.41/2025, சட்டப்பிரிவுகள் 126(2), 296(பி), 351(3) பி.என்.எஸ். உ/இ 25(1–A) Arms Act –ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை மேல் விசாரணைக்காக மாண்புமிகு தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால் வழக்கினை அரசுத் தரப்பில் மேற்கொள்ள தஞ்சாவூர் மாவட்ட அமர்வு நீதிமன்ற அரசு வழக்கறிஞர் கோரப்படுகின்றீர்.

ஒம்./– எஸ். பாலதண்டாயுதம்,
நீதித்துறை நடுவர் எண்.II,
கும்பகோணம்.

பெறுதல் :
அரசு வழக்கறிஞர் அவர்கள்,
முதன்மை மாவட்ட (ம) அமர்வு நீதிமன்றம்,
தஞ்சாவூர்.

//உண்மை நகல்//

நீதித்துறை நடுவர் எண்.II,
கும்பகோணம்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, KUMBAKONAM**

**DIARY EXTRACT**

**P.R.C. No.86/2025**

| | |
|---|---|
| 12.09.2025 | Perused the materials placed before this court. This court taken on file of offences Under Sec.126(2), 296(b), 351(3) BNS r/w 25(1-A) Arms Act against the accused. Call on 04.12.2025. |
| 04.12.2025 | Issue summon to accused. Call on 03.03.2026 |
| 03.03.2026 | A1 present. Copies given to A1 u/s.230 BNSS. A2 summon service pending. Call on 30.03.2026 |
| 30.03.2026 | A1 absent. A2 summon served. Called absent. No representation. Issue NBW against A2. Call on 30.04.2026 |
| 30.04.2026 | A1 present. A2 NBW pending. Call on 08.05.2026 |
| 08.05.2026 | A1 present. A2 NBW pending. Call on 01.06.2026 |
| 01.06.2026 | A1 present. A2 NBW pending. Call on 08.06.2026 |
| 08.06.2026 | A1 present. A2 NBW pending. Call on 03.08.2026 |
| 10.06.2026 | Hearing advanced today. NBW cancelled against A2. Copies given |

| | |
|---|---|
| | u/sec.230 BNSS. Call on 15.06.2026 |
| 15.06.2026 | Both accused present. Offences are exclusively triable by Hon'ble Court of Sessions. Committal proceedings read over to both accused and they have knowledge about the committal of this case and sufficient means to engage lawyer for their defense. Hence this case committed to the Hon'ble Principal District Court, Thanjavur and both are directed to appear thereon 06.07.2026 without fail. |

Sd./-S. Baladhandayutham,
Judicial Magistrate No.II,
Kumbakonam.

// True Copy //

Judicial Magistrate No.II,
Kumbakonam.